JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - PW- 5      Witness
for Prosecution

CC No. 69/2021    Crime No.    Station    -

| | | |
|---|---|---|
| Name | PW.5சத்தியசீலன் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 09nd day of September 2025 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் குச்சலூரில் குடியிருந்து கொண்டு பந்தல் போடும் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. கடந்த 2015 ஆம் வருடம் ஒரு நாள் மாலை சுமார் 6.00 மணி முதல் 7.00 மணிக்குள் நானும் செந்தில்குமார் என்பவரும் கீழ்வானையிலிருந்து அத்தாணி காலணிக்கு சென்று கொண்டிருந்தபோது, அத்தாணி தாண்டி செம்புலிச்சாம் பாளையம் ரோட்டில் கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்த போது போலீசார் அங்கிருந்தார்கள். அப்போது அங்கிருந்த 5 –6 நபர்களை காட்டி இவர்கள் தான் மோசடி கும்பலைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் செய்த மோசடி தொடர்பாக இந்த இடத்தில் விசாரித்து படம் வரைந்து கொண்டிருப்பதாகவும், பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் போடும்படியும் கேட்டுக் கொண்டதால், நானும் செந்தில்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் எங்கள் முன்னிலையில் மேற்படி நபர்கள் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.23,000/–யும், ஒரு இண்டிகோ காரையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் செந்தில்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் இண்டிகா காரை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இண்டிகா கார் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ..சா.ஆ 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் பணம் ரூ 23,000/– கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.09 06:30:43 +0530

என்னுடையதுதான். பணம் ரூ.23,000/- கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பணம் ரூ. 23,000/- அ.சா.பொ.1 அக குறியீடு செய்யப்படுகிறது. யாரிடமிருந்து பணமும் காரும் கைப்பற்றப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. ரொம்ப நாட்கள் ஆகிவிட்டதால் அவரின் அடையாளம் எனக்கு மறந்து விட்டது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு அல்லது மூன்று கையொப்பம் செய்திருப்பேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து தான் காவலர்கள் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து செந்தில்குமார் என்பவரும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தார் என்றால் செய்தான். நான் இதற்கு முன்பு ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் வேறொரு வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையை போலீசார் படித்துக் காட்டித்தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன் என்றால், சரிதான். போலீசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான்.

**எதிரிகள் 3,6 மற்றும் 7 ஆஜர் இல்லை குவிமுச 317ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.09 06:31:01 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.